# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 391/மா/2025

நாள்: 21.09.2026

இரா. தீபக் விக்ராந்த்,
சென்னை–600 107 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–7
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 107, கோல்டன் ஜார்ஜ் நகர், நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை, ஸ்ரீமஹாலக்ஷ்மி மந்திரா அடுக்ககம், B விங்க், பிளாக் 1, எண் 1405 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. தீபக் விக்ராந்த் என்பவரின் 29.09.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.09.2025 அன்று பெறப்பட்டு 391/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 107, கோல்டன் ஜார்ஜ் நகர், நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை, ஸ்ரீமஹாலக்ஷ்மி மந்திரா அடுக்ககம், B விங்க், பிளாக் 1, எண் 1405 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. தீபக் விக்ராந்த் என்பவர் தனது 29.09.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, அம்பத்தூர் மண்டலம் Town Survey Number 15 முகப்பேர் கிராமம் அரசு புறம்போக்கு குளத்தில் ஆக்கிரமித்து நடைபெறும் (APARTMENT Construction by Ms. S. LAKSHMI DEVI, Managing Director Oblong Realities Pvt Ltd. & Mr. K. Jayasankar Secretary Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Limited (MSCS/CR/16-91) கட்டுமான பணிகளை தடுத்து நிறுத்துதல், ஆக்கிரமிப்பை அகற்றுதல் மற்றும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோருதல் தொடர்பாக.
>
> சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்(CMDA) திட்ட அனுமதி எண் CMDA/PP/NHRB/N/0668/2024-23/11/2024 (GCC) பெருநகர சென்னை மாநகராட்சி நகரமைப்பு பிரிவு பணித்துறை கட்டிட அனுமதி எண் CEBA/WDCNO7/00005/2025 (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

அரசு புறம்போக்கு குளம் TS.No.15, Old S.No.356/2pt, Chennai District, Ambattur Taluk, Ward-9(059) Mogappair (Ward-H) விஸ்தீரணம் 68 Ares 50 Sqm. Town Survey Land Register Extract & FMB Sketch (நகல் இணைக்கப்பட்டுள்ளது) மேற்கண்ட மூன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்ட எனது புகார் மனு நாள் **1.3.2025.**

<u>PRAYER</u>:

மேற்கண்ட மூன்று அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட புகார்கள் மீது இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பெருநகர சென்னை மாநகராட்சியின் மேலே குறிப்பிட்டுள்ள அலுவலர்களின் செயலற்ற தன்மை மற்றும் அவர்களின் ஆதரவினால் ஆக்கிரமிப்பாளர்கள் தங்களது கட்டுமான பணிகளை தொடர்ந்து செய்து வருகிறார்கள். அரசு புறம்போக்கு குளத்தில் நடைபெறும் கட்டுமான பணிகளை உடனடியாக நிறுத்தவும், ஆக்கிரமிப்பு செய்து நடைபெறும் கட்டுமானத்தை அகற்றவும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சியை சேர்ந்த மண்டல அலுவலர் அம்பத்தூர் மண்டலம், செயற்பொறியாளர் அம்பத்தூர் மண்டலம், செயற்பொறியாளர் நகரமைப்பு பிரிவு பணித்துறை ஆகியோருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ **24.11.2025** நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் **21.08.2026** அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு **27.07.2026** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பிய பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய **20.08.2026** நாளிட்ட கடிதம் மஅ7/ந.க. எண் சிறப்பு/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

> ''பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7 அம்பத்தூர், பகுதி 20, கோட்டம் 93ல் எண் 5, நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் தெரு, கோல்டன் ஜார்ஜ் நகர், முகப்பேர் கிழக்கு, சென்னை–600 107 என்ற முகவரியில் உள்ள கட்டிடம் அரசு புறம்போக்கு குளத்தில் நடைபெறும் கட்டுமான பணிகளை உடனடியாக நிறுத்தவும், ஆக்கிரமிப்பு செய்து நடைபெறும் கட்டுமானத்தை அகற்றி ஆக்கிரமிப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கோரி வந்த புகாரின் அடிப்படையில் அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு அளவீடு செய்து கள குறியீடு செய்ய 11.10.2025, 08.12.2025 & 23.12.2025 ஆகிய தேதிகளில் கடிதம் அனுப்பி அதன் பொருட்டு 30.12.2025 அன்று துணை வட்டாட்சியர், அம்பத்தூர், நில அளவையாளர், அம்பத்தூர், உதவி பொறியாளர் பெருநகர சென்னை மாநகராட்சி Oblong Realities, and Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Ltd என்ற நிறுவனத்தின் அதிகாரி முன்னிலையில் அளந்து கள குறியீடு செய்யப்பட்டது.

மேலும் அளவீடு செய்ததில் இந்த கட்டிடத்தின் மேற்கு பக்கம் சுமார் 8.1 மீட்டர் அகலத்திற்கு குளத்தை ஆக்கிரமித்து கட்டிடம் அமைத்து உள்ளனர் என கண்டறியப்பட்டது. ஆனால் இந்த நிறுவன மேலாளர் தொலைபேசி மூலம் இந்த இடத்திற்கு தேவையான பட்டா ஏற்கனவே அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டதாக

கூறினார். மேலும் ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சி அனுப்பிய ஆக்கிரமிப்பு அகற்றும் தாக்கீது **128** அளித்ததிற்கு Oblong Realities, and Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Ltd என்ற நிறுவனத்திடமிருந்து பதில் கடிதம் பெறப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் தற்போது கட்டிடப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடம் பிளாக் E.TS.No.116/8, Old Survey No.345/1PT, 346PT, 406/2PT, 405/1PT, 2PT. 347PT பரப்பளவு **1743** சதுர மீட்டர் **20.10.2023** அன்று திரு. ரவிசந்திரன், வட்டாட்சியர் என்பவர் மூலம் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தது. ஆனால் இந்த கட்டிடம் பற்றி அவர்களிடமிருந்து புகார் வந்ததாக கூறி **12.08.2025** அன்று வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட விரிவான அறிக்கையில் அரசு புறம்போக்கு குளம் என்றும் மற்றும் மேற்குறிப்பிட்ட இடத்தை **30.12.2025** அன்று கள ஆய்வு மேற்கொண்டு கள குறியீடு செய்ததில் குளம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை கண்டறியப்பட்டது. எற்கனவே இதே இடத்திற்கு பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே அந்த இடத்தின் பட்டாவின் உண்மை தன்மையின் அறிக்கையும் மற்றும் உண்மைக்கு மாறானது என கண்டறியப்பட்டால் பட்டாவை ரத்து செய்யுமாறு அறிவுறுத்தி வட்டாட்சியர் அம்பத்தூர் அவர்களுக்கு **09.02.2026, 24.02.2026, 10.03.2026, 30.04.2026, 06.05.2026, 03.06.2026** மற்றும் **25.07.2026** ஆகிய தேதிகளில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள் வரை எந்தவிதமான பதிலும் கிடைக்கப்பெறவில்லை. இந்த தகவலை ஏற்கனவே கட்டிட அனுமதி அளித்த சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த கட்டிடத்தின் வரைபடம் மேற்கண்ட சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினால் வழங்கப்பட்டு இருப்பதினால் இக்கட்டிடத்தின் மீது கட்டிட விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி தலைமைத் திட்ட அலுவலர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA) அவர்களுக்கு **11.10.2025, 24.10.2025, 17.11.2025, 06.05.2026** மற்றும் **04.06.2026** ஆகிய தேதிகளில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

**5.** மனுதாரர் **21.08.2026** அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, அம்பத்தூர் மண்டலம் Town Survey Number 15 முகப்பேர் கிராமம் அரசு புறம்போக்கு குளம் TS.No.15, Old S.No.356/2pt, Chennai District, Ambattur Taluk, Ward-9(059) Mogappair (Ward-H) விஸ்தீரணம் 68 Ares 50 Sqm. ஆக்கிரமித்து நடைபெறும் (APARTMENT Construction by Ms. S. LAKSHMI DEVI Oblong Realities Pvt Ltd. & Mr. K. Jayasankar Secretary Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Limited (MSCS/CR/16-91) கட்டுமான தொடர்பாக மேற்கண்ட மூன்று அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட புகார்கள் மீது இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும் மேற்கண்ட அரசு புறம்போக்கு குளத்தின் ஒரு பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டிய போது அதுகுறித்து மனு அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த கட்டிட ஆக்கிரமிப்பாளர் தற்போது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

மேற்கண்ட அரசு புறம்போக்கு குளத்தில் தொடர்ந்து ஆக்கிரமிப்பு கட்டுமானங்கள் நடைபெறுவதால், அவ்வாறான நடைபெறும் ஆக்கிரமிப்பு கட்டுமான பணிகளை உடனடியாக நிறுத்தவும், ஆக்கிரமிப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும், ஆக்கிரமிப்பாளர் மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

**6.** எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் உதவிப் பொறியாளர் **21.08.2026** அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள அரசு புறம்போக்கு குளத்தில் நடைபெறும் கட்டுமான பணிகளை நிறுத்த கோரியத்தின் அடிப்படையில் அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களை அளவீடு செய்து கள குறியீடு செய்யுமாறு கோரப்பட்டதற்கிணங்க **30.12.2025** அன்று துணை வட்டாட்சியர் அம்பத்தூர் நில அளவையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் உதவிப் பொறியாளர் மற்றும் Oblong Realities and Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Ltd ன் அதிகாரிகளின் முன்னிலையில் அளந்து கள குறியீடு செய்யப்பட்டது.

மேலும் அளவீடு செய்ததில் மேற்கண்ட கட்டிடத்தின் மேற்கு பக்கம் சுமார் **8.1** மீட்டர் அகலத்திற்கு குளத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டப்பட்டது கண்டறியப்பட்டது. ஆனால் Oblong Realitiesன் நிறுவனத்தின் மேலாளர் இந்த இடத்திற்கு பட்டா ஏற்கனவே அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது என்று தெரிவித்தார். மேலும் Oblong Realities, and Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Ltd ஆகியோரின் கடிதத்தில் மேற்கண்ட இடத்தில் உள்ள பிளாக் E.TS No.116/9, Old Survey No.345/1PT. 346 PT. 406/2PT. 405/1PT. 2PT. 347Pt ல் பரப்பளவு **1743** சதுர மீட்டர் அளவிற்கு **20.10.2023** அம்பத்தூர் வட்டாட்சியர் பட்டா வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வருவாய் துறை செயலாளர் அவர்களிடமிருந்து புகார் வந்ததாக கூறி **12.08.2025** அன்று வட்டாட்சியர் அளித்த அறிக்கையில் அரசு புறம்போக்கு குளம் என்றும் மேலும் **30.12.2025** அன்று கள ஆய்வு மேற்கொண்டு கள குறியீடு செய்ததில் குளம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. ஆனால் எற்கனவே மேற்கண்ட இடத்திற்கு வருவாய் துறையினரால் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

எனவே அந்த இடத்தின் பட்டாவின் உண்மை தன்மையின் அறிக்கையும், உண்மைக்கு மாறானது என கண்டறியப்பட்டால் அந்த பட்டாவை ரத்து செய்யுமாறு அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு பிப்ரவரி **2026** முதல் ஏப்ரல் **2026** வரை கடிதங்கள் அனுப்பப்பட்டும் அம்பத்தூர் வட்டாட்சியர் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்கண்ட விவரங்கள் கட்டிட அனுமதி அளித்த சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அம்பத்தூர் வட்டாட்சியர் மேற்கண்ட பட்டாவினை ரத்து செய்த ஆணை பெறப்பட்டப்பின், புகாரில் தெரிவித்துள்ள கட்டிடத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அனுமதி அளித்துள்ளதால் சென்னை பெருநகரவளர்ச்சி குழுமத்திற்கு தகவல் அளித்து உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

புகாரில் தெரிவித்துள்ள அரசு புறம்போக்கு குளத்தில் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக Thiruvalluvar Transport Corporation Employees Cooperative Credit

Society Limited-ஆல் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வழக்கு சம்மந்தமான ஆவணங்களை இரண்டு நாட்களில் இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் உதவிப் பொறியாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, அம்பத்தூர் மண்டலம் Town Survey Number 15 முகப்பேர் கிராமம் TS.No.15, Old S.No.356/2pt, Chennai District, Ambattur Taluk, Ward-9(059) Mogappair (Ward-H) விஸ்தீரணம் 68 Ares 50 Sqm–ல் உள்ள அரசு புறம்போக்கு குளத்தின் ஒரு பகுதியில் Oblong Realities Pvt Ltd–னை சார்ந்த திருமதி S. லட்சுமி தேவி மற்றும் Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Limited–ன் செயலாளர் திரு. K. ஜெயசங்கர் ஆகியோரால் ஆக்கிரமித்து நடைபெறும் கட்டுமானம் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட புகார்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், அந்த ஆக்கிரமிப்பாளர் தற்போது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதும், மேற்கண்ட அரசு புறம்போக்கு குளத்தில் தொடர்ந்து ஆக்கிரமிப்பு கட்டுமானங்கள் நடைபெறுவதால், அவ்வாறாக நடைபெறும் ஆக்கிரமிப்பு கட்டுமான பணிகளை உடனடியாக நிறுத்தவும், ஆக்கிரமிப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும், ஆக்கிரமிப்பாளர் மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள அரசு புறம்போக்கு குளத்தில் நடைபெறும் கட்டுமான பணிகளை நிறுத்த கோரியத்தின் அடிப்படையில், அம்பத்தூர் துணை வட்டாட்சியர், நில அளவையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7, உதவிப்பொறியாளர் ஆகியோர், Oblong Realities Pvt. Ltd and Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Ltd-ன் அதிகாரிகளின் முன்னிலையில் அளந்து அம்பத்தூர் வட்டாட்சியரால் கள குறியீடு செய்யப்பட்டது என்பதும், அவ்வாறு அளவீடு செய்ததில் மேற்கண்ட கட்டிடத்தின் மேற்கு பக்கம் சுமார் **8.1** மீட்டர் அகலத்திற்கு குளத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டப்பட்டது கண்டறியப்பட்டது என்பதும், ஆனால் Oblong Realities ன் நிறுவனத்தின் மேலாளர் இந்த இடத்திற்கு பட்டா ஏற்கனவே அம்பத்தூர் வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது என்பதும் Oblong Realities Pvt. Ltd., and Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Ltd ஆகியோர் அளித்த கடிதத்தில் மேற்கண்ட இடத்தில் உள்ள பிளாக் E.TS No.116/9, Old Survey No.345/1PT, 346PT, 406/2PT, 405/1PT, 2PT, 347PT-ல் பரப்பளவு **1743** சதுர மீட்டர் அளவிற்கு அம்பத்தூர் வட்டாட்சியர் பட்டா வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், ஆனால் வருவாய் துறை செயலாளரிடமிருந்து புகார் வந்ததாக கூறியதை தொடர்ந்து அம்பத்தூர் வட்டாட்சியரால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கள குறியீடு செய்ததில், அரசு புறம்போக்கு குளத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது என்பதும், ஆனால் எற்கனவே மேற்கண்ட இடத்திற்கு வருவாய் துறையினரால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதும், அந்த

இடத்தின் பட்டா உண்மை தன்மைக்கு மாறானது என கண்டறியப்பட்டதால் அந்த பட்டாவை ரத்து செய்யுமாறு அம்பத்தூர் வட்டாட்சியருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டும் வட்டாட்சியாரால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், மேற்கண்ட விவரங்கள் கட்டிட அனுமதி அளித்த சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட பட்டாவினை ரத்து செய்ததற்கான அம்பத்தூர் வட்டாட்சியரின் ஆணை பெறப்பட்டப்பின், மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ள கட்டிடத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அனுமதி அளித்துள்ளதால் சென்னை பெருநகரவளர்ச்சி குழுமத்திற்கு தகவல் அளித்து உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள அரசு புறம்போக்கு குளத்தில் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக Thiruvalluvar Transport Corporation Employees Cooperative Credit Society Limited-ஆல் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதும், அவ்வழக்கு சம்மந்தமான ஆவணங்களை இரண்டு நாட்களில் சமர்ப்பிக்கப்படும் என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி உதவிப் பொறியாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, அம்பத்தூர் மண்டலம் Town Survey Number 15, முகப்பேர் கிராமம், TS.No.15, Old S.No.356/2pt, Chennai District, Ambattur Taluk, Ward-9(059) Mogappair (Ward-H) விஸ்தீரணம் 68 Ares 50 Sqm–ல் உள்ள அரசு புறம்போக்கு குளத்தின் ஒரு பகுதியில் Oblong Realities Pvt Ltd மற்றும் Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Limited ஆகியோரால் ஆக்கிரமித்து கட்டப்படும் கட்டுமான தொடர்பாக அம்பத்தூர் துணை வட்டாட்சியர், நில அளவையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7, அம்பத்தூர்–ன் உதவிப்பொறியாளர் ஆகியோர், Oblong Realities Pvt. Ltd and Thiruvalluvar Transport Corporation Employees Co-operative Credit Society Ltd-ன் அதிகாரிகளின் முன்னிலையில் அளந்து அம்பத்தூர் வட்டாட்சியரால் கள குறியீடு செய்யப்பட்டதில், அரசு புறம்போக்கு குளத்தின் ஒரு பகுதியில் மேற்கண்ட நிறுவனங்களால் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டப்பட்டது கண்டறியப்பட்டது என்று தெரிவித்த நிலையில், மேற்கண்ட அரசு புறம்போக்கு குளத்தில் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக Thiruvalluvar Transport Corporation Employees Cooperative Credit Society Limited-ன் சார்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P. No.27656/2023 தொடரப்பட்டு அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்று எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு சமர்ப்பித்த Affidavit மூலம் அறிய முடிகிறது.

மேற்காண் சூழ்நிலையில், நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து **2014** ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு **10 (3)** (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளப்பட்டது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் Thiruvalluvar Transport Corporation Employees Cooperative Credit Society Limited-ன் சார்பாக வழக்கு எண் W.P. No.27656 of 2023 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. இரா. தீபக் விக்ராந்த்,
பிளாக் 1, 1405, B விங்க்,
ஸ்ரீமஹாலக்ஷ்மி மந்திரா அடுக்ககம்,
நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை,
கோல்டன் ஜார்ஜ் நகர், சென்னை–600 107.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 7,
பெருநகர சென்னை மாநகராட்சி,
அம்பத்தூர், சென்னை–600 053.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.